விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 01 செவ்வாய் 15.06.2021 மலர் - 2, இதழ் - 70

# ஈமச்சடங்குகள் செய்த ஸ்வயம்சேவகர்கள்

கொரோனா இரண்டாம் அலையின்போது, கொரோனா காரணமாக இறந்தவரின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டது, அஸ்திகள் சேகரிக்க முடியாத சூழல், சடங்குகள் செய்ய சாஸ்திரிகள் கிடைப்பதில் சிரமம், காரிய மண்டபங்கள் மூடல் என பல காரணங்களால், இறந்த பல்லாயிரம் ஹிந்துக்களுக்கு ஈமச்சடங்குகள் செய்ய இயலாத சூழல் நிலவுகிறது. மத்திய பிரதேசம் விடிஷா பகுதியில் உள்ள காரயான் கிராமத்தில், குல்தீப் சர்மா என்ற ஒரு ஸ்வயம்சேவகர், தன் நண்பரின் பாட்டியின் இறுதி சடங்குக்கு உதவி செய்ய அங்குள்ள போர்கட் மயானத்திற்கு சென்றிருந்தார். அங்கு கொரோனாவால் இறந்தவர்களின் ஈமசடங்குகளைச் செய்ய மக்கள் இல்லை என்பதை உணர்ந்தார். அது, அவரது பார்வையை மாற்றியது. உடனடியாக, ஈமச்சடங்குகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவ முடிவெடுத்து அதற்கு தன் சக ஸ்வயம்சேவக சகோதரர்களின் ஒத்துழைப்பை நாடினார். சஞ்சய் பிரஜாபதி, துருவ் மற்றும் சுரேந்திரா ஆகியோர் உடனடியாக ஒப்புக்கொண்டனர். அந்த நான்கு ஸ்வயம்சேவகர்களும் அங்கு 38 நாட்கள் தங்கியிருந்து, விடிஷாவில் கொரோனாவால் இறந்த 205 பேருக்கு ஈமச்சடங்குகளை நிகழ்த்தினர். அதில், பதினான்கு பேரின் அஸ்தி கலசத்திற்கு உரிமை கோர யாரும் முன்வரவில்லை. எனவே, இந்த நால்வரும் இறந்த அந்த ஆன்மாக்களின் அஸ்தியை உத்தர பிரதேசத்தின் பிரயாகராஜுக்கு கொண்டு சென்று விசர்ஜனம் செய்தனர்.






# கைதுக்கு கண்டனம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட திமுக தலைவர்கள் குறித்து சமூக வலைதளங்களில் அவதூறாக பேசியதாக தி.மு. கவின் ஐ.டி பிரிவு சார்பில் அளிக்கப்பட்ட புகாரின் பேரில் சமூக வலைத்தள பிரபலம் கிஷோர் கே. சுவாமியை காவல்துறையினர் கைது செய்தனர். மூன்று பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்த சங்கர் நகர் காவல்துறையினர், தாம்பரம் கிளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அங்கு அவரை வரும் 28ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது. இதனையடுத்து, கிஷோர் கே சாமி சைதாபேட்டை சிறையில் அடைக்கப்பட்டார். கிஷோர் கே. சுவாமியின் கைது நடவடிக்கைக்கு பா.ஜ.க உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளனர். பா.ஜ.கவின் கலை மற்றும் கலாச்சார பிரிவின் மாநிலத் தலைவர் காயத்ரி ரகுராம் விடுத்துள்ள டுவிட்டர் பதிவில், "திமுக தலைவர்களை விமர்சித்ததற்காக கிஷோர் கே.சாமி கைது செய்யப்பட்டதற்கு என்னுடைய கண்டனத்தை தெரிவிக்கிறேன். ஜனநாயகம் எங்கே போனது? ஸ்டாலினும், உதயநிதியும் பிரதமர் குறித்து பொய் பேசியது, திருமாவளவன் ஹிந்து தர்மம், பிராமணர்கள் மற்றும் பிரதமர் குறித்து அவதூறாக பேசும் போதும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஒட்டுமொத்த தி.மு. கவினருமே பிராமணர்கள் குறித்துத் தவறாக பேசிவருகிறார்கள். தற்போது அவர்கள் தேவேந்திர குல வேலாளர்கள் குறித்து அவதூறாக பேசுகின்றனர். மேலும், எதிர்கட்சித் தலைவர்களை நாய்கள், துர்நாற்றம் என அழைத்த போதும், பெண்களை அவமரியாதையாக பேசிய போதும் ஏன் தி.முக.வினர் மீது கைது நடவடிக்கை எடுக்கப்படவில்லை? உள்ளதை கூறியதற்காக ஒருவர் கைது செய்யப்படுவதுதான் ஜனநாயகமா?," என கேட்டுள்ளார்.

# விரட்டியடிக்கப்பட்ட தி.மு.க.வினர்



துரைப்பாக்கம், கல்லுக்குட்டையில் உள்ள அரசு நிலத்தில் 5,000க்கும் அதிகமான வீடுகள் உள்ளன. நீர்நிலையான இப்பகுதியில் உள்ள காலி இடங்களை, அ.தி. மு.கவினர் சிலர் ஏற்கனவே வளைத்து போட்டு விற்பனை செய்து வந்தனர். அப்போது முதல்வரான ஜெயலலிதா, கட்சி நிர்வாகிகள் மீது தைரியமாக நடவடிக்கை எடுத்தார். தற்போதைய ஆட்சி மாற்றத்துக்கு பின் தி.மு.க.,வினர் சிலர் தற்போது, அந்த இடத்தின் முகப்பில் இருந்த குடிநீர் தொட்டியை அகற்றி, வேலி போட்டு ஆக்கிரமிக்க முயன்றனர். அந்தத் .தகவலையடுத்து துரைப்பாக்கம் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்றனர். அதற்குள் அப்பகுதி பெண்கள், காவல்துறையினர் கண் முன்பாகவே ஆக்கிரமிக்க வந்த தி.மு. கவினரை, விறகு கட்டை, துடைப்பம் கொண்டு சரமாரியாக தாக்கினர். அவர்களை சமாதானப்படுத்திய காவல்துறையினர் அரசு இடத்தை ஆக்கிரமிக்க முயன்ற ரமேஷ் மணிகண்டன், ராஜலிங்கம், சத்யா உள்ளிட்டோர் மீது, வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா போல இன்றைய முதல்வர் ஸ்டாலினும் தன் கட்சியினர் என்று பாராமல் நடவடிக்கை எடுப்பாரா என மக்கள் கேட்டுள்ளனர்.

# பா.ம.க. குறித்து புகழேந்தி விமர்சனம்



சென்னை விமான நிலையத்தல் செய்தியாளர்களை சந்தித்த அ.தி.மு.கவின் செய்தி தொடர்பாளர் புகழேந்தி, ஓ.பி.எஸ்சை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை என பா.ம.கவின் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளது குறித்து பேசிய அவர், 'ஓ.பி.எஸ், கையெழுத்து போட்டதால்தான் இன்று அ.தி.மு.க மூலமாக அன்புமணி எம்.பியாக உள்ளார். அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்ததால்தான் பா.ம.க தோற்றுவிட்டதாக சொல்வதை ஏற்க முடியாது. பா.ம.க வலுவாக உள்ள பகுதிகளில், அ.தி.மு.க தோற்றுள்ளது. எங்கள் தலைவர்களை குறை சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒவ்வொரு முறையும் கூட்டணி சேர்வதும், தேர்தல் முடிவுக்கு பின்னர் மற்றவர்களை விமர்சனம் செய்வதும் பா.ம.கவின் வாடிக்கையாக உள்ளது' என கூறினார்.

---





# ஸ்டாலினுக்கு ராமதாஸ் கேள்வி

தமிழகத்தில் நேற்று முதல் 27 மாவட்டங்களில் மதுபானக் கடைகள் தமிழக அரசு திறந்துள்ளது. கொரோனோ காலத்தில் இது தேவையற்ற செயல், இது கொரோனா பெருக்கத்திற்கு வழிவகுக்கும் என இதனை அனைத்து தரப்பினரும் விமர்சித்தும், கண்டித்தும் வருகின்றனர். இந்நிலையில் பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தமிழ்நாட்டில் கொழுந்துவிட்டு எரியும் தீயை அணைக்க தண்ணீரை ஊற்ற வேண்டிய தமிழக அரசு, பெட்ரோலை ஊற்றிக் கொண்டிருக்கிறது. கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலை அணைக்க மருத்துவர்கள் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், சமூகப் பொறுப்பும், மக்கள் நலனில் அக்கறையும் இல்லாமல் மதுக்கடைகளை திறக்க அரசு அனுமதித்திருப்பதை இப்படித்தான் வர்ணிக்க வேண்டியுள்ளது. தமிழகக்த்தில் ஊரடங்கை மேலும் ஒரு வாரத்திற்கு கூடுதல் தளர்வுகளுடன் நீட்டித்து உத்தரவு பிறப்பித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கொரோனா தொற்று குறைவாக உள்ள 27 மாவட்டங்களில் மதுக்கடைகளை திறக்க அனுமதி அளித்துள்ளார். இது மிகவும் ஆபத்தானது' என கூறியுள்ளதுடன் 'மது ஆலைகளின் அன்பான அழுத்தத்திற்கு பணிந்து விட்டாரா தமிழக முதல்வர் ஸ்டாலின்?' என சந்தேகத்தை எழுப்பியுள்ளார் பா.ம.க நிறுவனர் டாக்டர்.ராமதாஸ்.

# மாநிலங்களுக்கு உயிர் காற்று

கொரோனா காலத்தில் பல மாநிலங்களில் ஆக்ஸிஜன் தேவை அதிகரித்திருந்த நிலையில், மத்திய அரசு சரியான நேரத்தில், சரியான முயற்சிகளை எடுத்து தேவையான ஆக்ஸிஜனை ரயில்கள், சாலை, விமானம், கப்பல்கள் மூலம் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்தது. தற்போது ஆக்ஸிகனுக்கான தட்டுப்பாடு எந்த மாநிலத்திலும் இல்லை எனும் அளவிற்கு மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. தமிழகத்திற்கு இதுவரை 4,941 மெட்ரிக் டன் ஆக்சிஜன் வினியோகம் செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் திரவ மருத்துவ ஆக்சிஜனை, ஆக்சிஜன் எக்ஸ்பிரஸ் ரயில்களின் மூலம் இந்திய ரயில்வே தொடர்ந்து வினியோகித்து வருகிறது. இதுவரை, 421 ஆக்சிஜன் எக்ஸ்பிரஸ் ரயில்கள் 1,734 டேங்கர்களில் 30,182 மெட்ரிக் டன் ஆக்சிஜன் பல்வேறு மாநிலங்களுக்கு வினியோகம் செய்துள்ளது. குறிப்பாக தென் மாநிலங்களுக்கு 15,000 மெட்ரிக் டன் திரவ மருத்துவ ஆக்சிஜன் வினியோகிக்கப்பட்டுள்ளது. மக்களைக் காக்க, தற்போதும் 10 டேங்கர்களில் 177 மெட்ரிக் டன் ஆக்சிஜனுடன் 2 ரயில்கள் பயணித்துக் கொண்டுள்ளன. கூடுதலாக சில ஆக்சிஜன் எக்ஸ்பிரஸ் ரயில்களும் தங்களது பயணத்தைத் துவங்க உள்ளன.



# மதுக்கடைகள் காங்கிரசுக்கு உடன்பாடில்லை

காங்கிரஸ் மூத்த நிர்வாகயும், முன்னாள் மத்திய அமைச்சருமான ப. சிதம்பரம், சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்த பிறகு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, அவர், 'மது அருந்தும் பழக்கம் இருக்கும் வரையில் டாஸ்மாக் கடைகள் இருக்கும். மதுக்கடைகளை மூடினால், கள்ளச்சாராயம் பெருகும். இதனை யாராலும் மறுக்க முடியாது. இந்த விவகாரத்தில் தமிழக அரசுக்கு வேறு வழிகள் தெரியவில்லை. மதுக்கடைகளை திறப்பதில் காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடில்லை. மதுபழக்கம் உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும் என பணத்தை செலவழித்து தமிழக அரசு பிரச்சாரம் செய்ய வேண்டும். பள்ளி, கல்லூரிகளில் அறிவுரை வழங்க வேண்டும். பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் முதலில் மதுக்கடைகளை மூடட்டும். பிறகு தமிழகத்தில் மதுக்கடைகளை மூடலாம்' எனக் கூறினார்.





# சட்டவிரோதங்கள் அதிகரிக்கும் மலாட்

மும்பையின் புறநகர் பகுதியான மலாட்டில் உள்ள மல்வானி பகுதியில் சமீபத்தில், குடியிருப்பு கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது. இது, அப்பகுதியில் ‘22 ஹெக்டேர் சதுப்பு நிலக் காடுகள் ஆக்கிரமிப்பு, அங்கு வாழ்ந்த ஹிந்துக் குடும்பங்கள் துரத்தப்பட்டு பங்களாதேஷ், ரோஹிங்கியாக்களின் சட்டவிரோதமாக குடியமர்வு, இந்திய கடற்படை தளமான ஹம்லாவின் அருகில் அதன் பாதுகாப்புக்கு ஆபத்தான வகையில், 14.2 ஏக்கர் பகுதியில் குப்பைகள் கொட்டப்பட்டு ஆக்கிரமிப்பு, ஹிந்து வாக்காளர்களின் எண்ணிக்கை 15,000 குறைவு, முஸ்லிம் வாக்காளர்களின் எண்ணிக்கை 12,000 உயர்வு, ஆக்கிரமிப்பு நிலங்களில் நடைபெறும் கெட்டோ, சூதாட்டம், போதைப்பொருள் கடத்தல், ஆபாசப் படங்கள் போன்ற பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள், சமூக விரோதிகளுக்கு உள்ள அரசியல்வாதிகளின் ஆதரவு, முஸ்லிம் கும்பல்களால் அங்குள்ள ஹிந்துக்கள் வெளியேற்றம், பெண்களுக்கு எதிரான குற்றங்கள்’ என அங்குள்ள சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை அம்பலப்படுத்தியுள்ளது.



# விஸ்வநாதன் ஆனந்தை தோற்கடித்த நிகில்

கொரோனாவுக்கான நிவாரண நிதி திரட்டும் முயற்சிகளின் ஒன்றாக கிராண்ட் மாஸ்டர் விஸ்வனாதன் ஆனந்துடன் செஸ் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் ஜிரோதா மற்றும் டீம் பெக்கனின் இணை நிறுவனர் நிகில் காமத் கலந்துகொண்டார். அந்த சதுரங்க விளையாட்டில் யாரும் எதிர்பார்க்காத வகையில் நிகில் காமத், விஸ்வநாதன் ஆனந்தை தோற்கடித்தார். போட்டியில், காமத் 98.9 சதவீதமும், விஸ்வநாதன் ஆனந்த் 92.7 சதவீதம் துல்லியத்துடனும் விளையாடினர். இது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்நிலையில், ‘நான் உசேன் போல்ட்டுடன் போட்டியிட்டு 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தை வென்றேன் என சொன்னால் நம்புவீர்களா? அதை போலவேதான் இந்த விளையாட்டும். இந்த விளையாட்டில் நான் முறைகேடாகத்தான் ஜெயித்தேன். எனக்கு வெளியில் இருந்து உதவி கிடைத்தது’ என உண்மையை ஒப்புக்கொண்டார் நிகில் காமத். இதனையடுத்து, முறைகேடாக விளையாடியதற்காக செஸ்.காம் நிறுவனம் அவரது கணக்கை முடக்கியது.



# உச்ச நீதிமன்றத்தில் பெண்கள் முறையீடு



மேற்கு வங்கத்தில் ஆளும் திருணமூல் காங்கிரஸ் கட்சியினரால் மேற்கொள்ளப்பட்ட தேர்தலுக்கு பிந்தைய வன்முறையில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். பல பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டனர். இதில் பாதிக்கப்பட்ட பெண்கள், வன்முறை தாக்குதல், கற்பழிப்பு, வழக்கில் காவல்துறையின் அக்கறையின்மை குறித்து உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளனர். மேலும், இதனை ஒரு சிறப்பு விசாரணைக் குழு (எஸ்.ஐ.டி) அமைத்து விசாரிக்க வேண்டும் எனவும் முறையிட்டுள்ளனர். இதில் பல்வேறு பெண்களும் தாங்கள் எப்படி யாரால் பலாத்காரம் செய்யப்பட்டோம், தங்கள் வீட்டில் உள்ளவர்கள் எப்படி கொல்லப்பட்டனர், பொருட்கள் கொள்ளை, புகார் அளித்தால் கொல்லப்படுவோம் என மிரட்டல், புகார் பதிவில் காவல்துறையினரின் அலட்சியம், காவல்துரையினரே மிரட்டியது, குண்டர்களை வழி நடத்திய திருணமூல் கட்சித் தலைவர்கள் யார் யார் என அனைத்துத் தகவல்களையும் தெரிவித்துள்ளனர்.


# அகிலேஷ் முதலிடம்



உத்தரபிரதேச மாநில 2014 மற்றும் 2017களில் நடைப்பெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தல்களில் மோசமாக தோல்வியடைந்த சமாஜ்வாதி கட்சித் தலைவரும் முன்னாள் உத்தர பிரதேச முதல்வருமான அகிலேஷ் யாதவ், 2019 மக்களவைத் தேர்தலுக்காக தன் பரம எதிரியான மாயாவதியுடன் ஒப்பந்தம் செய்து தேர்தலை சந்தித்தார். ஆனால் அந்த சந்தர்ப்பவாத கூட்டணியும் தோல்வியடைந்தது. உ.பி.யில் அவர் கட்சி போட்டியிட்ட 80 மக்களவை இடங்களில் 5 இடங்களை மட்டுமே அவரது கட்சி வென்றது. அசம்கரில் போட்டியிட்டு லோக்சபாவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் அகிலேஷ். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், 'அவர் அசம்கருக்கு அதிகம் விஜயம் செய்யவில்லை. நாடாளுமன்றத்தில் தனது தொகுதி குறித்து கேள்விகளை எழுப்பவில்லை என்பதுடன் நாடாளுமன்றத்தில் 36 சதவீத வருகை மற்றும் பூஜ்ஜிய கேள்விகளுடன், அகிலேஷ் யாதவ் உத்தரபிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மிக மோசமாக செயல்படும் எம்.பியாக உள்ளார்' என ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது.

# குறை தீர்ப்பு அதிகாரிகள் நியமனம்

மத்திய அரசு சமீபத்தில் கொண்டு வந்த தகவல் தொழில்நுட்ப (ஐ.டி) விதியின்படி தங்கள் நிறுவனங்களில் குறை தீர்ப்பு அதிகாரிகள் உள்ளிட்ட அரசு வழிகாட்டு விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டுள்ளதாக நெட்பிளிக்ஸ், ஹாட்ஸ்டார், அமேசான், ஜியோ உள்ளிட்ட 800 ஓ.டி.டி தளங்கள், சமூக ஊடகங்கள் அரசுக்கு தகவல் தெரிவித்துள்ளன. இன்னும் பல நிறுவனங்கள் தங்களைப் பற்றிய விவரங்களை அரசுக்கு அனுப்பி வருகின்றன. நிறுவனங்கள் அனுப்பியுள்ள விவரங்களில், ஒவ்வொரு விதிமுறையையும் எந்த அளவுக்கு அவை பின்பற்றியுள்ளன என்பதை அரசு அதிகாரிகல் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.



# பா.ஜ.க. மகத்தான வெற்றி பெறும்

அண்மையில் முடிந்த ஐந்து மாநில சட்டசபை தேர்தலில் தமிழகம், மேற்கு வங்க மாநிலங்களில், தி.மு.க மற்றும் திருணமூல் காங்கிரசுக்காக பிரசார வியூகத்தை அமைத்துக் கொடுத்த பிரசாந்த் கிஷோர், அந்த தேர்தலுக்குப் பின், அரசியல் வியூகப் பணியில் இருந்து விலகப் போவதாக தெரிவித்திருந்தார். இந்நிலையில் தற்போது பிரசாந்த் கிஷோர் மும்பையில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், நடிகர் ஷாருக்கான் உள்ளிட்டோரை அண்மையில் சந்தித்துப் பேசினார். இது, 'மிஷன் 2024' எனப்படும் அடுத்த பார்லிமென்ட் தேர்தலை ஒட்டிய திட்டமிடல் என தகவல் வெளியானது. பா.ஜ.,வை எதிர்த்து 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வலிமையுடன் போராட எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைப்பது பற்றியும் எதிர்க்கட்சிகளின் பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்தும் இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. இது குறித்து பேசிய இந்திய குடியரசுக் கட்சித் தலைவரும் மத்திய அமைச்சருமான ராம்தாஸ் அத்வாலே, 'கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் பிரசாந்த் கிஷோரின் துணையின்றி தான் பா.ஜ.க தனிப்பெரும் கட்சியாக 303 இடங்களில் வெற்றி பெற்றது. 2024 லோக்சபா தேர்தலிலும் பிரதமர் மோடியின் தலைமைக்கே மக்கள் ஆதரவளிப்பார்கள்.



பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும்' என தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் அகதிகளுக்கு தடுப்பூசி

மத்திய பிரதேசத்தில் தொற்றுநோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஒன்று இந்தூர் மாவட்டம். அங்கு வசிக்கும் பாகிஸ்தான் அகதிகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும் என்று அவர்களின் பிரதிநிதிகள், மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்தனர். மாவட்ட நோய்த்தடுப்பு அதிகாரி டாக்டர் பிரவீன் ஜாடியா மூலம் இதனை அறிந்த முதல்வர் அலுவலகம் உடனே அதற்கு ஒப்புதல் அளித்தது. அவர்கள் தங்கள் பாஸ்போர்ட் அல்லது எதாவது அடையாள அட்டையைக் காட்டி நகரிலுள்ள தடுப்பூசி மையங்களில் தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 5,000 பாகிஸ்தான் அகதிகள் இந்தூரில் உள்ள சிந்தி காலனி உள்ளிட்டப் பகுதிகளில் உள்ளனர்.



# வளர்ச்சிப் பாதையில் ஜம்மு - காஷ்மீர்

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில், திருப்பதி வெங்கடேஸ்வரா ஸ்வாமி கோயில் கட்ட பூமி பூஜை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டி, ஜிதேந்திரா சிங் மற்றும் திருப்பதி தேவஸ்தானம் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் ஜி.கிஷன் ரெட்டி, 'ஜம்மு காஷ்மீரில் சட்டப்பிரிவு 370 நீக்கப்பட்டது, ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகியவை யூனியன் பிரதேசங்களாக மத்திய அரசு அறிவித்தது. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜம்மு காஷ்மீரில் சட்டம் ஒழுங்கு சீராக உ:ள்ளது. இடதுசாரி பயங்கரவாதிகள், சர்வதேச பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் குறைந்துள்ளது. ஜம்மு காஷ்மீர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக பயங்கரவாதத் தாக்குதல், பொருளாதார வளர்ச்சியின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட இம்மாநிலத்தையும் மற்ற மாநிலங்களை போல வளமுள்ள பொருளாதார பிரதேசமாக மாற்ற மத்திய அரசு முயற்சி மேற்கொள்ளும்' என்று கூறினார்.



# ஜல் ஜீவன் திட்டம்




தேசம் முழுவதும் வீடுகளுக்கு நேரடி குடிநீர் குழாய் இணைப்புகளை இலவசமாக வழங்க 'ஜல் ஜீவன்' திட்டத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. வரும் 2024ம் ஆண்டுக்குள் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நடப்பாண்டு பட்ஜெட்டில் இத்திட்டத்துக்கு ரூ. 50 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டது. அவ்வகையில், மேற்குவங்கத்துக்கு ரூ. 6,998.97 கோடி, குஜராத்துக்கு ரூ. 3,410 கோடி, மத்திய பிரதேசத்துக்கு ரூ. 5,117 கோடி, வடகிழக்கு மாநிலங்களுக்கு மொத்தமாக ரூ.9,262 கோடி, உத்தரபிரதேசத்திற்கு ரூ. 10,870 கோடியை மத்திய ஜல் சக்தித் துறை ஒதுக்கியுள்ளது.

# சீனாவின் திட்டத்திற்கு எதிர்ப்பு



ஜி 7 உச்சிமாநாட்டில், கலந்துகொண்டு பேசிய இத்தாலிய பிரதமர் சீனாவின் பெல்ட் மற்றும் சாலை திட்டம் (பி.ஆர்.ஐ) முன்முயற்சியை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். மேலும், அவர் சீனாவை பலதரப்பு விதிகளை மதிக்காத ஒரு எதேச்சதிகார நாடு என்றும் குற்றம் சாட்டியுள்ளார். முன்னதாக, கடந்த 2019ல் சீனாவின் இந்த திட்டத்திற்கு இத்தாலி ஒப்புதல் அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவின் பி.ஆர்.ஐ முயற்சியால் வளர்ந்து வரும் அதன் எதேச்சதிகார செல்வாக்கை ஈடு செய்ய, அமெரிக்கா, மற்ற ஜி 7 நாடுகளுடன் இணைந்து, 'பில்ட் பேக் பெட்டர் வேர்ல்ட்' (பி 3 டபிள்யூ) என்ற புதிய உலகளாவிய உள்கட்டமைப்பு முயற்சியை முன்மொழிந்துள்ளது. ஆனால், இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, 'உலகளாவிய முடிவுகள் இனி சிறிய குழுக்களால் எடுக்கமுடியாது' என சீனா கூறியுள்ளது.

# இஸ்ரேல் பிரதமருக்கு மோடி வாழ்த்து



இஸ்ரேலில் எதிர்க்கட்சிகள் யேஷ் அதித் கட்சி தலைவர் யெய்ர் லாப்பிட் தலைமையில் ஒன்றிணைந்து கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது. இந்த கூட்டணி ஆட்சியின் மூலம் இஸ்ரேலின் புதிய பிரதமராக நஃப்தலி பென்னெட் நேற்று பதவியேற்றார். இதன் மூலம் 12 ஆண்டுகள் இஸ்ரேல் பிரதமராக செயல்பட்டுவந்த பெஞ்சமின் நெதன்யாகுவின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. இஸ்ரேலின் புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள நஃப்தலி பென்னெட்டிற்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். பாரதப் பிரதமர் நரேந்திர மோடியும் இஸ்ரேலின் புதிய பிரதமர் பென்னெட்டிற்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி தனது டுவிட்டர் பதிவில், 'இஸ்ரேலின் பிரதமராக பொறுப்பேற்ற நஃப்தலி பென்னெட்டிற்கு வாழ்த்துக்கள். நாம் தூதரக உறவை புதுப்பித்து அடுத்த ஆண்டுடன் 30 ஆண்டுகளை நிறைவு செய்ய உள்ள நிலையில் உங்களை சந்தித்து நமது இருநாடுகளின் உறவை மேலும் வலுப்படுத்த நான் ஆர்வமாக உள்ளேன்' என தெரிவித்துள்ளார். அதேபோல், பிரதமர் மோடி வெளியிட்ட மற்றொரு டுவிட்டர் பதிவில் 'நெதன்யாகு, உங்கள் பதவிக்காலத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள நிலையில் பாரத இஸ்ரேல் உறவில் உங்கள் தலைமை மற்றும் தனிப்பட்ட கவனத்திற்கு நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்' என இஸ்ரேல் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

# துருக்கி அரசு பத்திரிகைக்கு கண்டனம்

துருக்கியின் அரசு செய்தி நிறுவனமான அனடோலு ஏஜென்சி (ஏ.ஏ) சமீபத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில், காஷ்மீரில் உள்ள மக்கள்தொகை புள்ளிவிவரங்களை மாற்ற பாரத அரசு 3.4 மில்லியனுக்கும் அதிகமான போலி குடியுரிமை சான்றிதழ்களை வழங்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை மறுத்துள்ள துருக்கியில் உள்ள பாரதத் தூதரகம் ‘அனடோலு ஏஜென்சி, பாரத அரசாங்கத்தால் வழங்கப்படும் டொமைசில் சான்றிதழ் எப்படி வழங்கப்படுகிறது என்பதை ஆராய்ந்து அறிந்து அதன் அடிப்படைகளை சரிபார்த்து, சரியான செய்தியை வெளியிட வேண்டும். பாகிஸ்தான் அரசின் பொய் பிரச்சாரத்திற்கு இரையாகக்கூடாது’ என கூறியுள்ளது.





# முற்பகல் செய்யின் . . .

ஒரு ஊரில் ஒரு குயவன் அவன் தாய், மனைவி, மகனுடன் வாழ்ந்து வந்தான். குயவனின் மனைவிக்கு அவளது மாமியாரைப் பிடிக்கவில்லை. அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பத் துணிந்தாள். குயவனை தினமும் நச்சரித்தாள். அவனது அம்மாவை பக்கத்தில் ஒரு வீட்டில் குடியமர்த்தும் படி சொன்னாள்.

ஒரு நாள் நச்சரிப்புத் தாங்காமல் அம்மாவைப் இருபது அடி தள்ளியிருந்த ஒரு வீட்டில் குடியமர்த்தினான் குயவன். மனைவி, மாமியாரிடம் தட்டு ஒன்றைக் கொடுத்து, வேளாவேளைக்குத் தன் வீட்டுக்குத் தட்டை எடுத்து வந்தால் அதில் உணவு தருவதாகவும், அதை மாமியார் அவர் வீட்டுக்கு எடுத்துச் சென்று சாப்பிடலாம் என்றும் கூறினாள்.

மாமியாருக்கு இது அவமானமாகத் தோன்றினாலும், தன் மகனுக்காக பொறுத்துக்கொண்டார்.

பேரனுக்குப் பாட்டி வீட்டை விட்டுப் போனது அறவே பிடிக்கவில்லை. அவன் வளர வளர அப்பாவைப் போலவே மண்பாண்டம் செய்ய சிறு வயதிலேயே கற்றுக் கொண்டான்.

அவன் முதல் முதலில் தன் அம்மாவுக்கு அருமையான தட்டு ஒன்றைச் செய்தான். அதை அவன் அம்மாவிடம் கொடுத்தபோது அவள் மகனின் திறமையை நினைத்து பெருமைப் பட்டாள், அளவில்லா மகிழ்ச்சி அடைந்தாள். தனது மகனிடம், "மகனே! நீ செய்த தட்டு அருமை. எத்தனையோ பாண்டங்கள் இருக்கும் போது ஏன் எனக்கு ஒரு தட்டைச் செய்து தர வேண்டும் என்று உனக்குத் தோன்றியது?" என கேட்டாள்.

மகன் குழந்தைத் தனமாகச் சொன்னான்: "அம்மா! ஒரு நாள் நான் அப்பாவைப் போலக் கல்யாணம் செய்து கொள்வேன். அப்போது நீ பாட்டியைப் போல பக்கத்து வீட்டுக்குப் போய் விடுவாய். அப்போது உனக்கு என் மனைவி தினமும் சாப்பாடு கொடுக்க ஒரு தட்டு வேண்டுமல்லவா! அதைத்தான் உனக்கு நான் இப்போது கொடுத்தேன்"

குயவனின் மனைவிக்குத் தான் செய்த தவறு புரிந்தது, வருந்தினாள். மாமியாரைத் தன் வீட்டுடன் வரவழைத்து அன்புடன் கவனித்துக் கொண்டாள்.

# பிரதமர் திட்டத்தால் மக்களுக்கு பலன்



நாட்டின் செயல்திறன் மிக்க மாவட்டங்களை தேர்வு செய்து, அவற்றின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் பிரதமர் நரேந்திர மோடி 'முன்னோடி மாவட்டங்கள்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் மாற்றங்களைக் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்தின் தனித்துவத்துக்கு ஏற்ப திட்டங்களை வகுக்கும் இத்திட்டத்தை ஐநா அமைப்பின் மேம்பாட்டு திட்டப் பிரிவு ஆய்வு செய்து சமீபத்தில் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், 'இத்திட்டத்தினால் பாரதத்தில் உள்ள மக்கள் தொகையில் 21 சதவீதத்தினரின் வாழ்க்கையில் வளமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து உள்ளிட்டவற்றில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. இத்திட்டம் நாட்டின் வளர்ச்சியை துரிதப்படுத்தும் வினையூக்கி' என பாராட்டியுள்ளது. ஐ.நா.வின் இந்த அறிக்கை குறித்து நிதி ஆயோக் அமைப்பின் சி.இ.ஓ அமிதாப் காந்த் கூறுகையில், இத்திட்டம் நாட்டின் வேர்களில் மாற்றங்களைச் சாத்தியப்படுத்தியுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் நாட்டின் பல பின்தங்கிய மாவட்டங்களிலும் முன்னேற்றத்தை உண்டாக்கி உள்ளது. இத்திட்டத்தில் பங்காற்றியது குறித்து பெரும் மனத் திருப்தி ஏற்படுகிறது' என தெரிவித்தார்.

---



# கண்ணி வெடிகளை அகற்றும் எலிகள்

கம்போடியாவில் சுமார் 60 லட்சத்துக்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இந்த வெடிகளில் சிக்கி 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்ததால், அவற்றை அகற்றுவதற்கு அந்நாட்டு அரசு முடிவு செய்தது. இந்தப் பணியில் மனிதர்களை ஈடுபடுத்துவது ஆபத்து என்பதால் எலிகளைக் கொண்டு கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. இந்தப் பணியில் மகாவா என்ற எலி 5 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியது. இதுவரை 71 கண்ணிவெடிகளை கண்டுபிடித்துள்ளது. மேலும், செயலிழந்த கண்ணிவெடி களையும் அடையாளம் காட்டியுள்ளது. இதன் பணியை அங்கீகரிக்கும் விதமாக இங்கிலாந்து விலங்குகள் நல அமைப்பு, எலி மகாவாவுக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவப்படுத்தியது. தற்போது மகாவா எலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. கண்ணி வெடிகளை அடையாளம் காண புதிய எலிகள் குழு, கம்போடியா அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. அபோபா என்ற தொண்டு நிறுவனம் மோப்ப சக்தியை கொண்டு கண்ணி வெடிகளைக் கண்டறிய எலிகளுக்கு பயிற்சி அளிக்கிறது. சிறப்பாக இருக்கும் எலிகளுக்கு `ஹீரோ ராட்' என்ற சான்றிதழையும் வழங்குகிறது.